அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி: 1, கதிர்: 28 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, ஆவணி 23 (8-9-61) வெள்ளி | விலை 16 காசு

தோழர் சம்பத் கட்சியினர் சென்னையில் நடத்துவதாகத் திட்டமிட்டிருக்கும் மாநாட்டின் நிகழ்ச்சிகளையும், அதற்கென ஓடியாடி உடல்வியர்ப்பதையும் காணுகின்றபோது நகைப்பும் சிரிப்பும் வருகிறது, நமக்கு.

மூன்று நாட்கள் மாநாடாம்! முதல் நாள் முத்தமிழ் மாநாடாம்—இரண்டாவது நாள் சாதியொழிப்பாம்!! மூன்றும் நாள் முழுக்க முழுக்க அரசியலாம்!!

* * *

கலைக்குள் கட்சியாமா!

அரசியல் அரசியலாகவேயிருக்கவேண்டும்—அதில் கலை கலப்பதோ—கேளிக்கை நடப்பதோ கூடாது—எதற்காக நடிகர்கள் வரவேண்டும்—என்ன கட்சி அது—நடிகர்களை மாநாடுகளில் நுழையவிடும் கட்சியும்—ஒரு கட்சியாகுமா—என்று கர்ச்சிப்பார் தோழர் சம்பத். கொள்கையென்பது அலாவுதீன் குகைக்குளிருக்கும் அற்புத விளக்கு; அதை இன்னின்னார் மட்டுமே புரிந்துகொள்ள இலாயக்குள்ளவர்கள்: நடிகர்களென்றால் அவர்கட்கு நடிக்க மட்டுமே தெரியும்—அவர்களுக்கு அரசியல் தெளிவு வராது—அவர்களை இழுப்பது ஆகாது, கூடாது என்று என்னென்னமோ பேசுவார்.

"ஆகா! புதிய தத்துவம்! யாருக்கும் புலப்படாத தத்துவம்! இப்படியன்றோ அரசியல் தலைவன் இருக்கவேண்டும். முழுக்க முழுக்க அரசியல் நடாத்தும் ஒரே தலைவன்..." என்று ஓவென்று பேசுவார்; எழுதுவார்; மகிழ்வார்;—மற்றொரு 'என்கேஜ்மெண்ட்'டுக்குப்போகும் வரை, கவிஞர் கண்ணதாசன்!!

கலையையும் அரசியலையும் கலக்கவிடக்கூடாது என்பதற்காகவே, தான் அக்கட்சியில் உறுப்பினராகவில்லை — 'உறுப்பினரில்லாத ஆதரவாளர்', என்று தன்னைச் சொல்லிக் கொள்வார். கவிதைப்புருவல்லவா? வாழ்க்கையும் அரசியலும்கூட அவருக்குக் கற்பனைக்கான பொருள்போலும்!

* * *

விளம்பரங்களும் செய்யப்பட்டு வருகின்றன—இன்னின்ன தத்துவங்கள் சரப்போகிறோம் நாட்டுக்கு என்றல்ல; மாநாட்டில் சிவாஜி கணேசன் கலந்துகொள்கிறார்— எம். ஆர். ராதா நாடகம் நடக்கும் என்பதாக.

ஆம்! அன்பர்களே!! தமிழ்த் தேசியக் கட்சிக் காரர்கள் நடத்தும் மாநாட்டில், நடிகர்களுக்கும் இடமுண்டு. 'இடமுண்டு' என்று சொல்வதைவிட, அவர்களை அழைக்கப் போய், எப்படியும் கலக்கச் செய்ய வேண்டுமென்பதற்காக, கொஞ்சியும், கெஞ்சியும், அவர்கள் சொன்ன நிபந்தனைகளுக்கெல்லாம் 'ததாஸ்து' போட்டிருக்கிறார்கள்.

'முழுக்க முழுக்க அரசியல்'—மூட்டைக் கட்டி மூலைக்கு வீசியெறியப்பட்டுவிட்டது!

'நடிகர்களா, அரசியலில்'—எனும் வீரச்சொல் தூக்கிப் போடப்பட்டுவிட்டது!

எந்த நடிகர்கள் தீண்டாதவர்கள்—அரசியலை அறியும் மூளையில்லாதவர்கள்——அவர்கள் இருக்க வேண்டிய இடம் சினிமா ஸ்டுடியோ—என்று யார் பேசினார்களோ, அவர்கள், ஓடி ஓடி, கெஞ்சிக் கெஞ்சி, நடிகர்கள் போட்ட நிபந்தனைகளுக்கெல்லாம் தலையையாட்டி, தங்கள் மாநாட்டுக்கு 'மவுசு' தேடுகிறார்கள்.

உண்மையில், இது நடிக உலகுக்கு ஒரு வெற்றியாகும். சினிமாவா, ஏ அப்பா! தூத்தூ, சேச்சே, என்று ஏதோ மலத்தைக் காண்பதுபோல் மூக்கைப் பிடித்துக் கொண்டு மூன்றுகாத தூரம் ஓடுவதுபோலச் செய்தவர்கள், இப்போது, மலர் என்று கருதி, மண்டியிட்டுக் கெஞ்சுகிறார்கள்—'தலையை நீட்டிவிட்டு வந்துவிடுங்கள்'—சும்மா! அப்படியே வந்து விட்டு வந்துவிடலாம்' என்று வளைகிறார்கள், நெளிகிறார்கள்!!

அதற்காகவே, முத்தமிழ் பெயரால் மாநாடு! பெயர் தமிழ்த்தேசீயக் கட்சி—தமிழை 'வெட்டி'ப் பிரித்து, தனியாக மாநாடு போடுகிறார்கள்!!

மறுநாள் — சாதியொழிப்பு மாநாடாம்! அதற்கு பெரியார் அவர்களும் குன்றக்குடி அடிகளாரும் வருகிறார்களாம்! 'சாதியொழிப்பையும் 'கட்சி'யிலிருந்து 'வெட்டி' எடுத்துத் தனியாக்குகிறார்கள்!!

இப்படி தனித் தனியாகப் போட்டால் அவர்கள் எல்லாம் கலந்துகொள்ள முடியும் என்று சொன்னார்களாம்-அய்யோ! நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்களோ அப்படிச் செய்யத்தயார், அவசியம்வர வேண்டும். அதுதான் முக்கியம் என்று தவைடனிட்டு நின்றனராம்!!

அப்படியெல்லாம் கெஞ்சிக் கொஞ்ச வேண்டிய அவசியம் என்ன? வேறொன்றுமல்ல—நாட்

2-ம் பக்கம் பார்க்க)

'பெரிய'வர் கையாடல்

உலகத்தில் இல்லாதவன் திருடனுவது சகஜம். ஆனுல் வாய்ப்பும் பெருமையும் உள்ளவர்கள் ஏன் ஊர்ப் பணத்தைக் கொள்ளையடிக்கவேண்டும்? அவர் உலக சுகாதார சங்கத்துக்கே தலைவராயிருந்தவர்! பேரும் புகழும் பெரிதும் பெற்றவர்!! அவர் மீது சுகாதார நிதியைக் கொள்ளையடித்துச் சொந்த வசதிக்குப் பயன்படுத்திக்கொண்டார் என்று இந்தக் கிழமை வழக்குப் போட்டிருக்கிறது சர்க்கார். அந்தப் பெரிய மனிதர் பெயர் டாக்டர் ஜேசம் டோக்பா. வழக்குப்போட்டிருப்பது லைபீரியா அரசாகும். மலேரியா தடுப்புக்காகவென்று ஒதுக்கப்பட்டப் பணத்தை 'அபேஸ்' செய்துவிட்டாராம். நான் பணக்காரன்—என் பெருமானம் உலகு அறியும்—என்று பீத்திக்கொண்டால் போதுமா? கோர்ட்டில் குற்றவாளிக் கூண்டில் அவர் நிறுத்தப்பட்டிருக்கிருர்!!

* * *

ஏழையின் உள்ளம்

சேமிப்பு நிதியிலிருக்கும் தன்னுடைய பணம் பூராவையும் அணு ஆராய்ச்சிக்கென ஒரு ஏழைத் தொழிலாளி அளித்திருக்கிருர். அவருடைய பிற்காலத்திற்கென்று, வேலை பார்க்குமிடத்தில் மாதாமாதம் கொஞ்சம் பிடித்துச் சேர்க்கப்பட்டு வருவதுதான் அந்த நிதி. இதுவரையில் சேர்ந்ததையும், இனிமேல் சேர்வதையும் அணு ஆராய்ச்சிக்கென நன்கொடை யளித்திருக்கும் அத்தொழிலாளி கல்கத்தாவுக்கருகிலுள்ள டம்டம் விமான தளத்தில் பணியாற்றி வருகிருர். அணுவைக் கொண்டு சமாதான வழிகளில் என்னென்ன செய்யலாமோ அந்த ஆராய்ச்சிக்குத் தன் நன்கொடை பயன்படவேண்டுமென்று அவர் எழுதியிருக்கிருர். ஆச்சரியம் என்ன தெரியுமோ? மேலே, பொதுப் பணத்தைக் கையாண்ட 'பெரிய மனிதன்' பெயரையும் வரலாற்றையும் போட்டுள்ள ஏடுகள், இந்த ஏழை உத்தமனின் பெயரைக் கூட போடவில்லை! கொள்ளையடிப்பவனுனுலும் 'மாடி வீட்டானு'க்குத்தான் இந்தக் காலத்தில் மவுசு போலும்!!

* * *

டில்லியில் கணேசர்

ஒரு நல்ல காரியத்துக்கு ஏழை பணம் சேர்த்து அளிக்கிருர். நாடாளும் காமராசரும் ரூ 35000 சேர்த்து டில்லிக்கு அனுப்பியிருக்கிருர். எதற்குத் தெரியுமா? அங்கே ஒரு பிள்ளையார் கோயில் கட்ட! இங்குள்ள பல கோயில்களின் நிதியிலிருந்து—இந்தப் பணம் கொடுக்கப்பட்டதாம், நன்கொடையாக. தமிழ் நாட்டுக் கோயில்போலவே இருக்கிறதாம். ருபாய் 35000 கோயில் கட்டப் போயிருக்கிறது! இதே நேரத்தில் தான், பிரதமர்நேரு, தன்னுடைய நிவாரண நிதிக்குப் பணமில்லை யென ஓலமிட்டார்!!

* * *

கடலுக்குப் பாலம்!

ஆமாம், கடலைத் தாண்ட மேம்பாலம் கட்டலாமா அல்லது கடலுக்குள் கீழே சுரங்கம் போல ரோடு போடலாமா என்று கேட்டு பிரஞ்சு சர்க்கார் பிரிட்டனுக்கு எழுதியிருக்கிறதாம். இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையிலுள்ள கடல் பகுதிக்குத்தான், இந்த ஏற்பாடு. இப்படியொரு பாலம் உண்டாக்க வேண்டுமென்று சொன்னவன் நெப்போலியனுகும். பிரிட்டன் சம்மதம் கொடுத்துவிட்டால், விரைவில் இந்தப்பாலமாவது--சுரங்கமாவது அமையும்! என்ன கடலுக்கா? என இங்கிருப்பவர்கள் ஆச்சரியத்தோடு கேட்பார்கள். ஆமய்யா ஆமாம், கடலுக்குத்தான்! இங்கே அல்ல அங்கே!!

* * *

உயிர் உண்டாக்கினர்

இறந்துவிட்டார் என்றே எல்லோரும் கருதினர். மின்சாரம் தாக்கியதால், அவருடைய உயிரும் போய்விட்டதென்றே, டாக்டர்கள் கருதினர். உயிர் போய் கொஞ்சநேரம்தான் ஆகியிருந்ததால் 'முயற்சிப்போம்' எனக் கருதி, இருதயத்தைப் பழையபடி ஓட வைக்க முடியுமா, என்று யோசித்தனர். இருதயம் இருக்கின்ற இடத்தை ஆபரேஷன் செய்து, அங்கேயுள்ள இருதயத்தைக் கையால் மெதுவாக அமுக்கி அமுக்கி (மாசேஜ்) மீண்டும் ஓட வைப்பதென்பது நவீன விஞ்ஞானிகளின் சாதனைகளில் ஒன்ருகும். உயிர் போய்விட்டதென்று கருதப்பட்டவருடைய, நெஞ்சையும் பிளந்து, இருதயத்தை மாசேஜ் செய்து ஓடச் செய்யவே, மாண்டவர் பிழைத்து விட்டார்! இந்த ஒப்பற்ற சாதனை சைப்ரஸ் தீவிலுள்ள நிகோசியா நகரில் இந்தக் கிழமை நடந்தது. சைப்ரஸ், நமது சென்னைப்பட்டினம் அளவுக்குள்ள நாடாகும்!!

—0—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்குச் சொல்ல வேண்டும், ஏ! அப்பா!! எவ்வளவு கூட்டம் வந்தது தெரியுமா, எமது மாநாட்டுக்கு என்று.

"ஆமாய்யா! முதல் நாள் கூட்டம் சிவாஜிக்கு வந்தது—இரண்டாம் நாள் பெரியார், குன்றக்குடியார் இருவரும் ஒரே மேடையிலாமே! எப்படி யிருக்கிறதுஎன்று பார்க்க வந்தது; அதோடு நடிகவேள் நாடகம் வேறு! அதனுல், சேர்ந்தது—உங்கள் கதையென்ன? அதைச் சொல்!!" என்று பேசுவார்களல்லவா, மக்கள்—இப்பேதுதான் எதையும் உடனே எடைபோட்டு விடுகிருர்களே மக்கள்!!

அதற்காக—கடைசிநாள் எப்படியிருக்கும் என்பதையூகித்துக் கொண்டுதானே என்னவோ, கட்சித் தொண்டர்கள் மட்டுமே கலந்து கொள்வர்—என்றுவிளம்பரம் செய்யப்படுகிறது! கூட்டம் கொஞ்சமாக யிருந்தால், புதிய கட்சி அதனுல் என்று சொல்லலாம். அதிகக் கூட்டம் வந்தால் அத்தனையும் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளலாம்!!

* * *

இன்னெருரு அதிசயம்: கவிஞர் கண்ணதாசன், மாநாட்டுக்காக பெரியாரைப் போய்ப் பார்த்தார்—குன்றக்குடிகளை நெருங்கினுர் சரி! ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்த, ஒவ்வொருநாள் தனித்தனி மாநாடும் போடுகிருர்கள்!!

அதோடு மட்டுமல்ல—ஆளும் முதல்வர் காங்கிரஸ் தலைவர் காமராசர் அவர்களையும் அழைக்கச் சென்று அரைமணி நேரம் தனியாகப் பேசினுராம். தனியாக என்ன பேசினுர், எப்படிப் பேசினுர் என்பதற்கான விபரம் யார் தராவிடினும்—மக்கள் அறிவார்கள்! 'இம்' என்ருல் இதுதான் காரணமாயிருக்கும் என்று உடனே 'நாடி' கண்டு விடுகிருர்களே மக்கள் இப்போது!

"திராவிட முன்னேற்றக் கழகத்தை வரப்போகிற பொதுத் தேர்தலோடு சமாதி கட்டிவிட வேண்டும்"—என்று காமராசர் சொன்னுல், உடனே தேசீயக் கட்சிக் கூடாரத்திலிருந்து, காமராசரைப் பாராட்டி அந்தாதியும் அகவலும் எழுதப்படுகிறது!

"தி. மு. க. வுக்குத் தடை கிளம்பும்!" என்று ஒரு செய்தி வந்தால் உடனே, 'காமராசரைப் போலப் புத்திசாலியும் திறமைசாலியும் கிடையாது! என்று தென்றல் மூலம் ஜவ்வாதும் கஸ்தூரியும் புனுகும் அவருக்குப் அனுப்பப்படுகிறது!

அதோடு தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது — திராவிட முன்னேற்றக் கழகத்தை என்ன செய்யலாம் என்கிற தீவிரயோசனையிலிருக்கிறது காங்கிரஸ்—சிறுசம்பவம் கிடைத்தால்அதைக் கொண்டு ஆங்காங்கே வழக்குகளையும் வம்புகளையும் உண்டாக்கி அதற்குள் முக்கியமானவர்களைச் சிக்க வைத்து சீரழிக்கவும் திட்டமிட்டுக் காரியங்கள் செய்யப்படுகின்றன — இப்படித் தேர்தலை எண்ணி, என்னென்னவோ செய்து கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியின் மூலவரை, புதுக்கட்சியின் மூலவர் போய்ப் பார்த்து அழைக்கிருர் என்ருல் என்ன பொருள்!!

"இதற்கென்ன பொருள்? புரட்டி அறிய அகராதியா வேண்டும். புதிய கட்சிக் கிளம்பியதுமே நாங்கள் சொல்லி விட்டோமே குட்டிக் காங்கிரஸ்" என்று பொதுமக்கள் பதில்தரக் கூடும். இப்போதுதான் எதானுலும் உடனுக்குடன் எடைபோட்டுச் சொல்கிருர்களே, மக்கள்!!

* * *

"வெட்டிக் கொண்டு ஒட்டி" யென்ருேம்!!- இதென்னப்பா வெட்டிப்பேச்சு, விளங்கவில்லையே என்கிருர்கள் மக்கள்!!

ஒட்டிக்கொண்டு வெட்டி வாழ்வோம்! என்று ஓடினேம் ம. பொ. சியிடம், ஆதித்தனுரிடம்-ஒட்டியாவது! வெட்டியாவது! இதென்ன பித்தலாட்டம்! போ, போ, என்று அவர்களும் கேலி செய்து விட்டார்கள்!!

அய்யா ஒருவர்தான் இலைமறையாக ஆதரவு தருகிருர்—அவருடைய ஆதரவைப் பெற்றவர் காமராசர் ஆகவே...இப்படிப் போகிறது தமிழ்த் தேசியக்கட்சியின் அரசியல்.

"செச்சேச்சே! கட்சியென்ருல் அதனுடைய கொள்கையை மட்டும் எடுத்துரைத்துஅந்தக்கொள்கையின் அடிப்படையில் கட்சியை வளர்க்க வேண்டும். அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிப்போர் மட்டுமே கூடி விவாதித்து முடிவெடுத்தலே சரி"—என்று தத்துவ விளக்கம் தரப்பட்டதுஅந்தக் காலம்! ததிங்கிணதோம் போட்டாவது கூட்டத்தைக் கூட்டி பெருமை பெற வேண்டும் என்று முயற்சிக்கப்படுகிறது, இந்தக்காலம்!!

அதிலும் ஒரு வேடிக்கை. ஆண்டு பன்னிரெண்டாக நாம், கழகம் பிறந்த நாளை செப்டம்பர் 17-ந்தேதி கொண்டாடி வருவதை நாடு அறியும். அந்த நாளை நாம், ஊர்வலம் நடாத்தி உற்சாகத்தோடு நடத்துவோமென்பதையும் நல்லோர் அறிவர். வேண்டுமென்றே அதே நாளில் ஊர்வலமும் மாநாடும் வைத்திருக்கின்ருர் சம்பத்! நண்பர் கண்ணதாசனே அவர்கள் மாநாடு நடத்தப் போவது தெரிந்து நாம் கூட்டங்கள் ஏற்பாடு செய்வதாகக் குமுறிக் குமுறிக் கொட்டுகிருர்!!

கட்சி ஆரம்பித்து ஐந்தாறு மாதங்கள்கூட ஆகவில்லை—அதற்குள் ஏன் மாநாடு போட வேண்டும் அவர்கள்? நியாயப்படி ஒரு மாநாடு என்ருல், ஓராண்டின் சாதனைகளுக்குப் பிறகே போடுவார்கள். அப்படிப் போடவேண்டுமானுல், அடுத்துவரும் பொதுத்

(11-ம் பக்கம் பார்க்க)

நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

- 6 -

ஆர்வத்தின் காரணமாக சகோதரர் கருணாநிதி மாட்டிக்கொண்டு திண்டாடிய சம்பவங்கள் ஏராளமுண்டு. திருவாரூரில் ‘தேசீய மாணவனாக’ யிருந்த என்னைச் சுயமரியாதைக்காரனாக்கியவர் அவர் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! அவருடன் சோந்ததும் எனக்கு அவர் தந்த முதல் வேலை, நாடகத்தில் வேடம் போடச் சொன்னது. அவர் எழுதிய ‘சாந்தா அல்லது பழனியப்பன்’ (இப்போது ‘நச்சுக் கோப்பை’ என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது.) நாடகத்தைத் தமிழ் நாடு மாணவர் மன்ற நிதிக்காகப் போட்டோம். எனக்கு டாக்டர் வேடம். நாடகம் நடந்த அன்று நல்ல மழை. கூட்டமில்லை. மொத்தத்தில் 200 ரூபாய்க்குமேல் நஷ்டம்!! என்ன செய்வது! நாங்களோ மாணவர்கள் — பணத்துக்கு எங்கே போவது? அப்போது நாகப்பட்டினத்தில் திராவிடர் கழக பிரமுகராயிருந்த ஆர். வி. கோபால் என்பவர் 200 ரூபாயைத் தர முன்வந்தார். இனமாக அல்ல! பதிலுக்கு அந்த நாடகத்தினைத் தான் நடிப்பதற்கான உரிமையைப் பெற்றுக்கொண்டார்!! நடிகவேள் எம். ஆர். ராதாவைப் பார்த்து ‘கிராப்’பும் வளர்த்துக் கொண்டார், தோழர் கோபால். அதோடுபோகாமல், ராதாவைப் போலத் தானும் ஒரு நாடகக் கம்பெனி வைத்தார். அந்த நாடகக் கம்பெனி உருவானதும் கருணாநிதியையும் கூப்பிட்டுச் சேர்த்துக் கொண்டார். வீட்டில் ஒழுங்காயிருக்க வேண்டிய கருணாநிதிக்கு ஏன் இந்தத் தொல்லை? அவர் வீட்டில், பலத்த எதிர்ப்பு. எனக்குக்கூட பிடிக்கவில்லை. அவருக்குத் திருமணமான நிலை வேறு. நாடக மூலம் சமுதாயத்தில் பெரியதொரு எழுச்சியை உருவாக்கப் போவதாக—எண்ணிக்கொண்டு, சேர்ந்தார்! விழுப்புரத்தில் கம்பெனி ஆரம்பமாயிற்று. நல்ல, தோல்வி. ‘டேராவைக் கிளப்பிக்கொண்டு பாண்டிச்சேரிக்கு நாடகக் கம்பெனிப் போய்ச் சேர்ந்தது. நல்ல பெயர். வசூலும் அதிகம். எதிர்ப்பும் அதிகம். கனல்கக்க நாடகத்தில் பேசுவார மு. க! அதனால் காங்கிரஸ்காரர்கள் எப்படியாவது கருணாநிதியைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்றிருந்தனர். அதே சமயம் அங்கே கழக மாநாடு ஒன்று போடப்பட்டது. மாநாடு கலவரத்தில் முடிந்ததோடு, கருணாநிதி துரத்தி துரத்தி அடிக்கப் பட்டார்!!

இதைக் கேட்டபோது நான் கலங்கினேன். ஆனால், அவர் அதைப்பற்றி பெருமையாக எழுதியது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது... நான் திருத்துறைப் பூண்டியில் படித்தபோது, ஒரே நாளில் இரண்டு மாநாடுகளை நடத்தினோம்! காலையில் மாணவர் மாநாடு: மாலையில் கருஞ்சட்டை படை மாநாடு. மாணவர் மாநாட்டின் துவக்குபவர் கருணாநிதி அவர்கள். அப்போது அவர், அய்யா அவர்களுடன் ஈரோட்டில் ‘குடியரசு’ப் பத்திரிகையையும் பார்த்துக் கொண்டிருந்தார். காலையில் இரயிலில் அவரை வரவேற்கப் போனோம். நல்ல காய்ச்சலுடன் நடுநடுங்கிக் கொண்டிருந்தார்.

“இந்தக் காய்ச்சலுடன் ஏன் வந்தீர்கள்?” என்றேன். காய்ச்சல்மட்டுமல்ல, அம்மையுங்கூட. —என்றார், அவரோடு வந்த தோழர் தவமணிராசன். எனக்கு மகாக் கோபம். இந்த இலட்சணத்தில் வராவிட்டால் என்ன, என்றேன். “எப்படிங்க? ஒத்துக் கொண்டு எப்படி வராமலிருப்பது!” என்றார். எவ்வளவோ தடுத்தும் கேளாது, மாநாட்டில் பேசினார். அதன் காரணமாக படுக்கையில் விழுந்து பல நாள் படாத பாடுபட்டார்...இப்படி எவ்வளவோ நிகழ்ச்சிகள் வருகின்றன நினைவுக்கு! அவருடைய ஆர்வம் பற்றி கழகச் சகோதரர்கள் அறிவார்கள், ஆகவே, நான் அதை விவரிக்க விரும்பவில்லை.

மேடைகளில் ஏறினால், அவர் எரிமலைதான்! அழகிரி அண்ணன் செத்த சின்னாட்களுக்கெல்லாம் தஞ்சையில் கருணாநிதி பேசினார். பேசுகின்ற பொழுது; அவரால், அய்யா அழகிரியண்ணன் சாவுக்கு வராதது தாங்க முடியவில்லை. அதனால் கண்ணீரோடு கண்டனத்தையும் உதறினார். உண்மையை இதயத்துக்குள் புதைத்துக்கொண்டு, சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி சாகசமாகப் பேச அவருக்கு வராது; அதனால்; அவர் அன்றும் இன்றும் ஆளாகும் திடீர் வேதனைகள் பல உண்டு!! இப்படி அவர் பேசினார் என்கிற செய்தி அய்யாவுக்கு எட்டியது.

அதேசமயம் தோழர் அன்பழகன் அவர்களும் போகின்ற ஊர்களில, கழகத் தொண்டர்களை எடுபிடிகள் போல அய்யா எண்ணுவதைப்பற்றி உரையாடும்போது சொல்வதுண்டு. தோழர் அன்பழகன் அவர்களுக்கு எப்போதும் எதையும் தடாலெனக் கொட்டிவிடும் சுபாவம்! அதிலும், கழகத்தவர்கள் அனைவருமே தன்னைப்போல, எதையும் வெளிப்படையாக எண்ணுவார்கள்—பேசுவார்கள் என்கிற எண்ணம் கொண்டவர். ஒரு சுயமரியாதைக்காரன், எதிலும் துணிவும், தன் மதிப்பைக் குறைத்துக் கொள்ளாத மனிதத்துவமும் பெற்று விளங்க வேண்டும் என்று எண்ணுகிறவர். அவருடைய அப்பாவும் அப்படித்தான்! அன்பழகன் அவர்களுடைய தந்தையார், திரு கலியாண சுந்தரம் அவர்கள் ஒரு காலத்தில் மாயவரம் வட்டாரத்தில் தீவிரத் தேசிய வாதியாகயிருந்தவர்கள். கதர் என்றாலே தூ! தூ! என்று பிறர் கருதிய காலத்தில் கையிலிருந்த பணத்தையெல்லாம் போட்டு, கதர் கடைவைத்து பலத்த நஷ்டம் அடைந்தவர்கள். சுயமரியாதை இயக்கத்தின் அந்தநாள் சிங்கங்களில் ஒருவரானமாயவரம் நடராசன் அவர்கள் அன்பழகனாரின் குடும்பத்துக்கு மிக மிக நெருங்கிய உறவினராவார்கள். காங்கிரஸ் வாதியாகயிருந்த கலியாணசுந்தரனார் மணவழகனாக மாறி, தீவிர சுயமரியாதைக்காரரானார்கள்! அப்படி மாறிய பிறகும் அவரால் எதையும் ஒளித்தோ, உள்ளத்தில் வைத்தோ பேச முடியாது. இப்போது நம்முடைய அறிவியக்கம் எப்படி எப்படியோ வளர்ந்து விட்டது. இதிலிருப்பது கூடப் பெருமையென்று கருதும் கட்டம் இன்று. ஆனால் அன்று, ஏச்சும் பேச்சும், உற்றார் உறவினரின் பழியும்தான் கிடைக்கும்! அந்தச்சமயத்தில்சொத்தையெல்லாம் இழந்த அன்பழகனாரின் அருமைத் தந்தையார் கழக ஏடுகளை (குடியரசு, திராவிடநாடு) விற்பதன் மூலம் கொள்கைக்குத் தன்னாலான தொண்டினைச் செய்துகொண்டு, அதனால்வரும் வருவாயை வைத்து (என்ன வந்திருக்கும் தெரியாதா‘) வாழ்வதே சுயமரியாதை என்று கருதினார். அந்த வருமானத்தைக்கொண்டு வாழ்க்கையையும் நடத்திக் கொண்டு தன்னுடைய பிள்ளைகளைப் படிக்க வைத்தார்! அப்படிப் படிக்க வைக்கும்போதே, அவர்களையும் கொள்கைப் பிடிப்பிலேயே வளர்த்தார்!!

ஏழ்மையினூடே யிருப்போர் எங்கள் பிள்ளைகள் ஒழுங்காகப் படித்துப் ‘பாஸ்’ செய்தால் போதும் என்றே எண்ணுவர். ஆனால் திரு. கலியாண சுந்தரனார் அவர்கள் பரீட்சையில மட்டுமின்றி தன் பிள்ளைகள் கழகக் கொள்கைகளிலும் “பாஸ்” செய்ய வேண்டுமெனப் பெரிதும் ஆசைப்பட்டார். அவருடைய ஆசையின் விளைவால்தான் இன்று அன்பழகன் எம். ஏ., புலவர் திருமாறன், அறிவழகன் எம். ஏ. எனும் பரம்பரையை நாம் காண்கிறோம்! சுயமரியாதைக் குடும்பமாகும் அது. வசதிகள் மட்டும் இருந்திருக்குமாயின் பட்டம் பெற்ற அவரது செல்வங்கள் கழகப்பணியிலேயே இறங்கியிருக்க கூடும். இப்போதுகூட அன்பழகன் அவர்களுக்கு இந்தக்குறை இருந்து வருவதை நான் அறிவேன்...

அப்படிப்பட்ட குடும்பத்தில் வளர்ந்த அன்பழகனுக்கு இயக்கம் எடுப்பார் கைப்பிள்ளையாகி வருவது எங்ஙனம் பொறுக்கமுடியும்? அய்யா அவர்கள் கழகத்தை தன் சுண்டு விரலிலிருக்கும் நகம் போலக் காத ஆரம்பித்து கிள்ளியெறிவது போல, வளர்வோர் தனக்குத்தானே என்று கருதாமல் எரிச்சலடையும் நிலைமைக்கு வந்து கொண்டிருந்தார்கள். தான் ‘வளர்த்த’ பிள்ளைகள் என்று குதூகலம் அடைய வேண்டிய பெரியாரின் உள்ளம் வர வர குகையாகிக் கொண்டே வரலாயிற்று.

கழகத்தில் தோழர் ஏ. பி. சனார்த்தனம் என்றால் அப்போது ‘டார்பிடோ’ என்று கொண்டாடுவார்கள். அவரும் ஏழை இல்லத்துக்குழந்தைதான்! ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடாமலிருக்க என்னால் முடியவில்லை...

(10-ம் பக்கம் பார்க்க

அய்யோ, ராஜா!

"எல்லோரும் சாகப் போகிறவர்கள்தான். இருந்தாலும் சாவை நம்மால் தாங்க முடியவில்லை" என்றுர், ஒரு பெரியவர். அதிலும் உயிருக்குயிராய் பழகி, உண்டு, உறங்கி, நமது சுகதுக்கங்களில் பங்குகொண்ட ஒருவரை இழந்துவிட்டபோது என்ன உலகம் இது' என்கிற விரக்தியே வந்து விடுகிறது. உனக்கு எனக்கு, விட்டேனு பார், அவன் புத்திசாலியா நானு, இப்படி அல்லாடும் மனிதர்கள், சாவை நினைததால் மிகப் பெரிய வேதாந்தியாகத்தான் வேண்டும். அடடா! எதை நான் எழுதுவேன்? நானும் அவரும் அப்படிப் பழகியவர்கள்! எனக்கொரு காய்ச்சல் என்றுல் அவர் துடிப்பார் அப்படி!! என் கட்டுரையை இரண்டொருவர் பாராட்டிவிட்டார்களென்றுல், அப்படி பூரித்துப் போவார். மிகமிக இளகிய மனம். நெஞ்சத்துக்கு அதிர்ச்சிதரக்கூடிய சிறு நிகழ்ச்சி யெதையேனும் கண்டுவிட்டால், அப்படியே உட்கார்ந்து விடுவார். திராவிடநாடு அலுவலகத்துக்குள் வந்த அண்ணு, "என்ன ராஜா!" என்று கேட்காவிட்டால், தொட்டாற்சுருங்கிப் போலப் போய்விடும் முகம். "நான் ஏதாவது தப்பு செய்துவிட்டேனு? ஏன் என்னிடம் அண்ணு பேசவில்லை" என்று உருகிப் போய் விடுவார். பஞ்சுநெஞ்சு கொண்ட என் அருமை நண்பர் அவர்! ஐந்தாறு மாதம் நோயில் கிடந்தார். அவதியால் துடி துடித்துத் தவித்தார். என்பார்களே அதுபோலக் கூட அல்ல, திடீரென்று இறந்துவிட்டார்! அன்றுகாலையில்கூட என் அலுவலகத் தோழர்களைப் பார்த்து, "நான் கண்ட அண்ணு—எனும் தலைப்பில் அரங்கு எழுதுவது அவ்வளவு அருமையாயிருக்கிறது. நடுவில் இரண்டு இதழ்கள் கிடைக்கவில்லை. அது வேண்டும்" என்று கேட்டிருக்கிருர். ஏடுகளுடன், இரவில் சென்ற என் அலுவலகத் தோழர், இறந்துவிட்டார்" என்கிற செய்தியை! என்னிடம் வந்து சொன்னுல், எப்படியிருக்கும் எனக்கு நெஞ்சுவலித்ததாம்--இது வழக்கமாகஎனக்கு வருவதுதானே என்று பேசாது இருந்தாராம்-பணிபு'ந்த 'முரசொலி' அலுவலகத்திலிருந்து வீட்டுக்குப் போனுராம்-வலிஅதிகமாகயிருக்கிறது என்கிற சேதி வரவே மாறனும் சத்தியும் மல்லியும் சொர்ணமும் அடியாரும் பிறரும் ஓடோடியும் சென்றனராம்-அங்கிருந்ததோழர் எம். எஸ். வெங்கடாசலம் எம்.ஏயும் பிறருமாகச் சேர்ந்து பெரிய டாக்டர்களிடம் அழைத்துப் போக ஏற்பாடுகள்செய்தனராம்-அய்யகோ! அதற்குள், காதலித்துக் கலப்புமணம் செய்து கொண்டு வள்ளுவர் வாசுகி போல் வாழ்ந்ததன் இளமனைவியையும் அவர் கையில் தவழும் நாலு வயதுக் குழந்தையையும் இந்த உலகில் விட்டுவிட்டு, ராசா பாதர் எனும் பெயர் கொண்டு நட்பின் திலகம் மறைந்து விட்டது!!

எண்ணவும் நினைக்கவுமே என் இதயம் தாங்கவில்லை. அவரைப் பிணமாகக் கண்டபோது, என்னைக் கண்டதும் அவர்தம் உறவினர்கள்ஓவென்று கதறியபோது என்இதயமே நின்றுவிடும் போலாகிவிட்டது. "திராவிடநாடு" அலுவலகத்தில் நானும் நண்பர் வில்லாளனும் பணியாற்றிய போது, கிட்டத் தட்ட ஒரு குடும்பம் போலவேயிருந்தோம்! அந்தக் குடும்பத்தில் அடிகள், கேடி. எஸ். மணி, ராஜா, ஆர், கே. மூர்த்தி, சம்பந்தம்,பஞ்சாட்சரம், மாணிக்கம், ஏழுமலை, குப்புசாமி, என்று பலர். அந்த வாழ்க்கையை, எங்களில் யாராலும் மறக்க முடியாது. அப்படிப்பட்ட குடும்பத்தில் ஒருவர் இராசாபாதர்! அண்ணுவுக்கு நெருங்கிய உறவினர் என்பது மட்டுமல்ல,கழகக் கொள்கைகளிலும்தீவிரமானவர். அதற்கு ஒரு நல்ல சான்று! அலுவலகத்திலிருந்த ஆர். கே. மூர்ததிக்குத் தனது மைத்துனியைக் கலப்புமணம் செய்வித்தார், மகிழ்ச்சியுடன். 'சித்தப்பா!' என்று மூர்த்தி அழைப்பதும், அவர் ஏனையோரிடம் பழகிய முறையும், எளிதில் மறக்கக் கூடியதன்று. சிறு நிகழ்ச்சி புண்படும்படி நடந்து விட்டாலும் ஓவென்று அழுதுவிடுவார்!! அவருடைய அண்ணன் இராசரத்தினம் அவர்கள் மூன்று நான்கு மாதங்களுக்கு முன்புதான், திடீரெனக் காலமானுர். அடுத்து இவர்என்றுல், அக்குடும்பம் எப்படிக் கலங்கும் என்பதைச் சொல்லவும் முடியுமோ?

எண்ணியெண்ணிப்பார்க்கிறேன் இப்படிப் பட்ட சாவின் வரிசைகளை நமது அண்ணுவின் மென்மையான மனம்எப்படித் தாங்குமோஎன்று? அண்மையில் டபிள்யு. கே. தேவராசனுர்; டிரைவர் சுந்தா, இராசரத்தினம், இராசா...இவர்கள் அனைவரும் அண்ணுவின் மீதும் அவர்தம் குடும்பத்துடனும் நெருங்கிப் பழகியவர்களாகும். உண்மையில் அண்ணுவின் குடும்பமும் கலங்கக் கூடிய சம்பவமாகும் இச்சாவு!!

'தம்பி' ஏட்டின் நிர்வாகியாகவும், ஓராண்டு காலமாக 'முரசொலி'யிலும் பணியாற்றினுர் தோழர். இராசா.

அவரை இழந்த அவருடைய துணைவியார் பேபிக்கும், அவரது இன்பதுன்பங்களைத் தன்னுடையதென நினைக்கும் ஆர். கே. மூர்த்திக்கும், ஏனைய உறவினர்களுக்கும் எப்படி ஆறுதல் சொல்வதென நினைக்கின்றேன். கண்ணீரே படர்கிறது! என்னே உலகம். என்னே சாவு, என்கிற விரக்தியே படர்கிறது!!

—0— —0—

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எந்த இதயமும் எதிர்பார்க்கத்தான் செய்யும். ஆனுல் அய்யாவைச் செயற்கரிய செய்யும் பெரியார் என்று எண்ணியன்றே, போற்றுகிறேம். அவருக்குக்கூட ஏன் இந்தப் பாசம் பற்று என்றெல்லாம், பிஞ்சு உள்ளங்கள் அப்போதும் பேசாமலில்லை...

இப்படிப்பட்ட ஆசா பாசங்களும், அடுத்தவன் எப்போதும் இருந்த நிலையிலேயே இருக்க வேண்டும் என்று எண்ணுகிற இயல்பும் ஆதிகாலத்துச் சுயமரியாதை இயக்கத் தந்தையிடம் இருந்திருக்க முடியாது. அடடா! அப்போதைய 'பச்சை அட்டைக் குடியரசை எடுத்துப் படித்தால் இப்போதும் எப்படியிருக்கிறது—எப்படிப்பட்ட வாதங்கள்—காங்கிரசைக் கண்டிக்கும் அவருடைய ஆணித்தரமான உரைகள்—உண்மையில் அவர் செயற்கறிய செய்தவர் என்பதில் ஐயமில்லை. அந்த மரியாதையையும் மதிப்பையும் நம்முடைய உள்ளங்களிலிருந்து அகற்றிக்கொள்ளும் கண்ணியமற்ற கபோதிகளுமல்ல நாம். ஆனுல் அந்தப் பெரியாருடைய மனதில் ஏனிப்படிப்பட்ட சலனங்கள் உதயமாயின என்பது மிகவும் விரிவாக விமர்சிக்கபட வேண்டிய கட்டமாகும். தமிழ் நாட்டின் அரசியலைப்பற்றி எழுதும் எதிர்காலம் நிச்சயம் இப்படியொரு கட்டம் உருவானதைக் கண்ணீரோடுதான் எழுதும்.

அய்யாவின் மனதில் இதைப் போன்ற அருவருப்புகள் எழக் காரணம்,

இயக்கம் அவர் நினைக்காதளவுக்கு மிக மிகப் பெரியதாக ஆகும் அறிகுறிகள் தென்பட்டதுதான். அப்படி ஆக, ஆக எங்கேஜனநாயக வாடை அரும்பிவிடுமோ, அது ஏன், இது எப்படி என்று கேட்க ஆரம்பித்து விடுவார்களோ; என்கிற அச்சம் அவருக்கு ஏற்பட துவங்கிவிட்டது. அதோடு தன்னுல் கட்டிக் காக்க முடியுமா என்கிற சந்தேகமும் அவருக்கு எழுந்துவிட்டது.

"என்னப்பாஇது! தான்வளர்த்தது. ஆல்போல் தழைப்பதை யாரே விரும்பார்? தன்னுடைய செல்லக் குழந்தைகள் சீரும் சிறப்பும் பெறுவதை எந்தத் தந்தைதான் வெறுப்பார்? நீ சொல்லும் வாதம் மிக மிக விசித்திரமாயிருக்கிறதே!" என்று சிலர் கேட்கக்கூடும்.

உண்மையில் இது ஒரு மிக மிக விசித்திரமான நிலைதான்! ஆனுலும் அய்யாவுக்கு ஏற்பட்டது. என்ன காரணம் என ஆராயுமுன் உளநூல் வல்லுநர் கூறும் தாழ்வு மனப்பான்மையேஇதற்கு மூலக்கரு என்று மட்டும் சுருக்கமாகக் கொள்ளலாம். தன்னை விடப் படித்தவர்கள்—தன்னை விடத் தமிழாய்ந்த புலவர் பெருமக்கள்—நன்றுக ஆற்றேட்டம் போலப் பேசக் கூடியவர்கள்—அரும்ப அரும்ப, அவருக்கும் 'தாழ்வு மனப்பான்மை' புகுந்துவிட்டது. அந்தக் காலத்தில் மேடைகளில் அய்யாவுக்கு முன்பு பேசுகிறவர்கள் யாராவது கொஞ்சம் நன்றுகப் பேசி இரண்டொரு கைதட்டுதல்களைப் பெற்றுவிட்டால் போதும், உடனே அய்யாவின் கைத்தடி மேடையில் 'டங் டங்' என்று தட்டப்படும்!

தஞ்சை மாவட்டத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் சகோதரர் கருணுநிதி ஆவேசமாகப் பேச, அய்யா தடியைத்தட்ட, "அய்யா அவர்களே! மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேம். வடநாட்டு எதிர்ப்புப் போரில் ஈடுபட வரிசை வரிசையாக நாங்கள் அணிவகுத்துவரும் அந்த நேரத்திலாவது தயவுசெய்து கொஞ்சம் உங்கள் கைத்தடியை வீட்டில்

11-ம் பக்கம் பார்க்க

புதிய கட்சியின் புலம்பல்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியப் பெருமையினைக் கொள்கை வளர்ச்சியினை திராவிட மக்களின் நலன் நாடும் நல் உள்ளப் பண்பாட்டினை கழகத்தின் எதிரிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

கழகத்தின் அரசியல் எழுச்சியினைத் தங்களின் ஆதிக்கவெறிக்கு எதிராகக் கிளம்பியுள்ள அபாய அறிவிப்பென ஆட்சிபீடத்திலேயிருக்கும் காங்கிரசுக்காரர்கள் பல நாட்களுக்கு முன்னதாகவே உணர்ந்துகொண்டு விட்டனர். அதனாலேயே அடக்குமுறை அம்புகளும் அடியாட்களின் அருவருக்கத்தக்க இழிசெயல்களும் அலை அலையாகக் கழகத்தின்மீது ஏவிவிடப்பட்டன.

காந்தியாரின் சீடர்களான காமராசரின் கடைக்கண் வீச்சுக்குத் தங்களின் கண்ணியத்தை விலையாக தந்துவிட்டவர்கள் கழகத் தோழர்களின் பிணங்களின் மீது நடைபோட்டார்கள், எதிர்க் கட்சிகளின் பட்டியலிலே இருக்கும் எல்லோரும் தங்களின் படைபலத்தைக் கண்டனக்குரல்களைக் கழகத்தின் மீதே திருப்பினர். இத்தனைக்கும் முன்னேற்றகழகம் முழுவலிவுடன் முகமலர்ச்சியுடன் முதுகு காட்டி ஓடிவிடாமல்எதிர்ப்பைத் தாங்கிச் சமாளித்தது. தன்னுடைய விடுதலைக் குரல் தரும் பாதையிலே துணிவுடன் நடை போட்டது, நாட்டவர் வாழ்த்த நானிலம் புகழ வளர்ந்தது. இந்த உண்மைகளை நன்கு அறிந்திருக்கும் நம்மவர்கள்நல்ல நண்பர்களாக இருந்து இன்று நாசப் பாதையிலே சென்று கொண்டிருக்கும் புதுக்கட்சியினர் மறந்து விட்டனர்.

கழகத்தை எதிர்ப்பது தங்களின் கடமையெனக் கூறிக்கொண்டு திருவோடுஏந்தும் திருவாளர்களாக தமிழகத்தைச் சுற்றிவந்து கொண்டுள்ளனர். அவர்களது பொயயுரைகளைக் கொஞ்சம கணக்கிட்டுக் காண்போம்.

*　　*　　*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் அந்தக் கொள்கைகளைக் காடுமேடு சுற்றி வளர்த்திட்ட தலைவர்களையும் தரங் குறைந்த வார்த்தைகளினாலே புதுக் கட்சியினர் வசைபாடிக் காட்டுகின்றனர். புதுக்கட்சியினர் முதல் தலைவர் எனப்படும் சம்பத் அவர்களிலிருந்து நான்காம் ரகத் தலைவர்களும் எந்தத் தரத்திலும் சேர்க்க முடியாத நபர்களும் ஏசுவதுஒன்றே சரியெனக் கருதி உலாவருகின்றனர். ஒற்றைவாடைக் கொட்டகையிலே துவங்கிய அவர்களது புலம்பல் உரைகளை மதுரைச்சந்தை வரையிலும் இழுத்துவந்து விட்டார்கள். புதுத் தலைவரின் திடீர்த் தலைவரின் ஒன்றரை மணி நேரப் பேச்சையும் மதுரையில் கேட்டேன். மூச்சுப் பிடித்துவெளியிட்ட கருத்துக்கள் ஏனைய எல்லா இடங்களிலும் சொல்லப்பட்டவைகளே!

மதுரைச் சந்தையிலும் ‘டேப் ரிகார்டு’ போல ஒலிபெருக்கினார்! தன்னுடைய திடீர் தேசியத்திற்கு விளக்கம் சொல்லிப் பதினைந்து நிமிடம் பேசுவதற்குள் ரொம்பவும் சங்கடப்பட்டார்.

அதற்குமேல் தன்னுடைய புதுக் கட்சியின் புரியாத தமிழ் தேசியத்தைப்பற்றிப் பேச தெரியாததால் அறிஞர் அண்ணா அவர்கள் மீதுர் தன்னுடைய எரிச்சலைக் காட்டும் வகையில் அவதூறுகளைத் தொடுத்தார்! அந்தப் புதுத் தலைவரின் தரங்

கூடலரசன்

குறைந்து போனதினாலே வார்த்தைகளும் தரங்குறைந்தே வெளிவந்தன!

திராவிடநாடு என்று சொன்னாலும் தமிழ்நாட்டுப் பெருமைகளையே பேசினேம். மற்ற பகுதிகளின் பெருமைகளைபேசநினைக்கவில்லை அதனால் திராவிட தேசியத்தில் முன்னேற்றக்கழகத்தின் தலைவர்களுக்கேநம்பிக்கையில்லை என்று தடித்த வார்த்தைகளிலே தெரிவித்தார். எல்லோரும் கண்டிப்பாக ஒப்புக் கொள்வர் என்று அவர் எண்ணியிருந்தால் அது மிகவும் தவறாகும். சாதாரணக் கழகத் தோழர்கூட சொல் இழந்த செல்வரின் சோகக்குரல் கேட்டு நிச்சயம் சிரித்திருப்பார்!

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய வளர்ச்சிக்காலத்தில் தமிழ் மன்னர்களை அறிஞர்களைப் பாராட்டியது போலவே திராவிடத்தின் மற்ற பகுதி மக்களையும் பாராட்டியுள்ளது, வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் வாழ்த்தியிருக்கிறது.

புதுத்தலைவரின் ஒரு வியப்புக்குரிய வினா வீரன் வேலுத்தம்பியைப்பற்றி எப்போதாவது நீங்கள் நினைத்ததுண்டா என்பதாகும்!

இப்போது அவருக்குக் கிடைத்திருக்கும்கையாட்களிலேஏழாவது அல்லது எட்டாவது ரகமாகஇருக்கும் என். எஸ். இளங்கோ என்பவர்கூட வீரன் வேலுத்தயைப் பற்றிக் கட்டுரை எழுதியிருக்கிறார். புதுத் தலைவர் நினைவு தடுமாறி நிலைகெட்டுப் போயிருப்பதால் மறந்துவிட்டார் போலும்! வேலுத் தம்பிகளைப் புதுத்தலைவர் தான் எப்போதும் எண்ணிப் பார்க்கவில்லையே தவிர மற்றவர்கள் பாராட்டித்தான் பேசியிருக்கிறார்கள். மதுரைக்கு வந்தமுதல் நாள் நள்ளிரவில் மார்த்தாண்ட மன்னனைக் கனவிலே கண்டது போலவும், மறுநாள் மாலை மதுரைப் பொதுக்கூட்டத்தில் அதனை நினைத்துக் கொண்டது போலவும் மார்த்தாண்டனை மறந்து விட்டீர்களே என்று மார்பினை நிமிர்த்திக் காட்டிக் கேட்டார்!

மர்மக் கதையிலே சில பகுதிகளை மட்டும் சொல்லி மக்களை மயக்கும் தெருவோரத்து மைனர்களைப் போல மாபெரும் புதுக் கட்சியின் தலைவர் கேட்கக்கூடாதவைகளையெல்லாம் கேட்டிருக்கிறார்! மன்னன் மார்த்தாண்டனைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால் தன்னுடைய தீவிர ஆதரவாளர், உறுப்பினராகாமலே உதவித் தலைவராக இருக்கும் கண்ணதாசனிடம் கேட்டிருக்கலாம்! அவர்தான் மன்னன் மார்த்தாண்டனைப்பற்றி நான் எழுதிய கட்டுரையினை வெளியிட்டு மகிழ்ந்து என்னையும் பாராட்டியிருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினைப்பற்றி எதுவும் தெரியாத ஏமாளிகள்கூட திடீர் தலைவரைப் போல் கோமாளித்தனக் கேள்விகளைக் கேட்டதில்லை. மன்னன் மார்த்தாண்டன் வாழ்ந்தபத்மனாபுரம் அரண்மனை நாகர் கோவிலுக்கு அருகிலேதான் அமைந்துள்ளது. அதனுடைய அழகான அமைப்பினையும் அங்குள்ள வரலாற்றுச் சின்னங்களையும் அருமையான நிகழ்ச்சி தொகுப்புகளின் ஓவியங்களையும் கண்டு களித்த நான் கட்டுரை வடிவிலே தந்தபோது மகிழ்ந்தவர்களைசதிக் கூடத்தின் சந்தர்ப்பத் தலைவர் தெரிந்து கொள்ளவில்லை! கேரளத்து இலக்கிய மேதைகளான குமரன் ஆசான் சுகுமாரன் மகாகவி வள்ளதோல் போன்றாரையெல்லாம் கழக ஏடுகள் சிறப்பித்துப் பெருமைப்படுத்திய அருஞ்செயல்களை யெல்லாம் ஒற்றைவாடை தலைவர் ஒதுக்கி வைத்துவிட்டு ஒலிபெருக்குகிறார்!

நாராயண குருவின் நல் சீர்திருத்த எண்ணங்களை இலங்கை மண்ணிலும் மதிக்கிறார்கள். மன்றம் நிறுவி மாண்பினை தந்துள்ளனர். அங்கே சென்று பேசிய நண்பர் மனோகரன் நாராயணகுருவின் தத்துவங்களை விளக்கி கோழை உள்ளங்களையும் எழுச்சி பெறச் செய்தார். இதனை புது தலைவர் அறிவாரா எனில் நன்றாக அறிவார்.

ஆந்திரக்கவிஞர் வேமன்னாவை அறிஞர் அண்ணா அழகுபட மதிப்பிட்டார், இதனை அவசர தலைவர் அறிந்திருக்க வேண்டும்! ஆனால் இல்லையென்கிறார் — தொல்லையெனஒதுக்கியதாக இழிசொல்லை எடுத்து வீசுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடத்தின் பெருமைகளை நலன்களை மதிக்கும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். கன்னடத்தின் இலக்கிய பெருமைகளைக் கழகம்கன்னியத்துடன் வாழ்த்தியிருக்கிறது, அரசியல் கிளர்ச்சிகளையும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் காண மறுத்துவிடவில்லை, ஆந்திரப் பகுதியிலே நடைபெற்ற தெலிங்கானாக் கலவரங்களையும் சுட்டு தள்ளப்பட்ட கொடுமைகளையும் கண்டிக்க தவறவில்லை. கேரளத்தில் சர். சி. பி. இராமசாமி அய்யரின் அடக்கு முறைகளைக் கண்டித்த நாட்களிலிருந்து கம்யூனிஸ்ட் ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற நாசவேலைகள் வரை எப்போதும் கழகம் ஓய்ந்திருக்கவில்லை. தவறுகளை எடுத்துக் கூறவும எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே என்பதை நினைவூட்டவும் தவறவில்லை.

திராவிட மாநிலங்களை தாழ்த்திய போதெல்லாம் அவைகளின் புகழுக்காகவும் பெருமைக்காகவும் கழகம் தன் குரல் உயர்த்தி கொடுமை களைய வேண்டியுள்ளது. தமிழகத்தில் மட்டுமே தமிழர்களை மட்டுமே பாராட்டிக் கொண்டனர் என்ற தலைவரின் புலம்பல் மொழிப் பேச்சு கடந்த காலச் செய்திகளையெல்லாம் நினைவூட்டுகிறது.

தேசீய போதையிலே திராவிட இன துரோகத்தை செய்துவிட்ட கும்பலில் இன்னம் எத்தனையோ விபரீதச் செய்திகளைக் கேட்கிறோம்! வடநாட்டிலேயிருக்கும் அனைவரையும் நாம் பகைவர்களாசக் கருதி விட்டோமாம்! அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்பது புதுதலைவர் புதுடில்லிக்குப்போய் தெரிந்து கொண்டாராம்! வடவர் ஆதிக்கத்தை அது எந்த உருவிலே வந்தாலும் திராவிட இயக்கம் எதிர்க்கும், அங்கே அடிமைப்பட்டு அல்லலுறும்மக்களின் அவதியினை அல்லலைக் கண்டு மனம் துடித்திருக்கிறோம் மகிழவில்லை! உண்ணாவிரத வீர தலைவர் இந்த உண்மையினை உணரவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் வடநாட்டிலேயிருக்கும் பல்வேறு

10-ம் பக்கம் பார்க்க

எது இருந்தென்ன!

"சின்னஞ் சிறிய நாடுக ளெல்லாம் இன்று விடுதலை முழக்கமிட்டு, வெற்றி கீதம் பாடிவரும் இந்நாளில், பரந்த நிலப்பரப்பையும் தொன்மைப் பண்பாட்டையும், பண்புமிக்க இலக்கியங்களையும் கொண்டிருக்கும் நாம், கண்களிலிருந்து குருடர்களாய், காதுகலிருந்தும் செவிடர்களாய் வாயிருந்தும் ஊமைகளாய் வாழ்ந்து வருவது கண்டு, விடுதலையடைந்துள்ள ஏனைய நாட்டினர் நம்மை எள்ளி நகையாடிப்

தங்கவயல் லோகிதாசன்

பேசுவதைக் கண்டு நாம் வெட்கப்பட வேண்டுமே தவிர, ஆத்திரப்பட்டு பலனில்லை! அடிமை நாட்டுக்கு அந்நியநாடுகளிலுள்ள மதிப்பு எத்தகைய தென்பதை கீழ்காணும் சம்பவமே எடுத்துக்காட்டாக விளங்குகிறது!

* * *

ஒரு சமயம் ரவீந்ரதாத் தாகூர் ஜப்பானுக்குச் சென்றிருந்தார். அவர் அங்கு சிலநாட்கள் தங்கிய பிறகு, ஒரு கல்லூரி ஒன்றில் பேசுவதற்காக அவரை அழைத்திருந்தார்கள். வங்கக் கவிஞரும் வருவதாய் ஒப்புதல் அளித்தார். நகரமெங்கும் இச்செய்தியானது பரவியது,

குறித்தநாள் வந்தது. கவிஞரும் அக்கல்லூரி நோக்கிப் போய்க் கொண்டிருந்தார், அச்சமயம் இரு ஜப்பானிய இளைஞர்கள் நடைபாதையிலே நின்று கொண்டிருந்தனர். அதில் ஒருவன் தாகூரைக் கண்டுவிட்டான். உடனே அவனுக்கு கவிஞரின் அன்றைய நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அவசர அவசரமாக அவன் தன் நண்பனைப் பார்த்து, நண்பா! அதோ பார்! அந்த வண்டியில் போகிறாரே அவர்தான் வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர். இன்று நம் கல்லூரியில் பேசப் போகிறார்! வருகிறாயா, இருவருமாகச் சென்று அவரது சொற்பொழிவைக் கேட்போம்?" என்று கேட்டான்.

"இவர் பேசுவதையா நாம் கேட்க வேண்டும்?" என்று அலட்சியமாகப் பதிலுக்குக் கேட்டான் அந்த நண்பன்.

"ஏன், இவர் பெரிய கவிஞரப்பா!"

"ஓ...ஓ...!

"நோபிள் பரிசு பெற்றவராயிற்றே! இது கூடவா தெரியாது உனக்கு?

"அப்படிய?"

"என்ன அப்படியா என்று ராகம் இழுத்துக் கொண்டிருக்கிறாய்? வங்கமொழியில் பல இலக்கியங்களை உண்டாக்கியவராயிற்றே!"

'மிகவும் சுவையாய்இருந்திருக்கும்!"

"ஆமாம், நீ யேதும் படித்ததில்லையோ? அவர் மகாத்மா காந்தியின் அந்தாங்க நண்பருங்கூட!'

"நண்பா! நிறுத்து...!

"ஏன்...?"

"அவர் கவிஞராயிருக்கலாம்-பரிசுகள் பல பெற்றவராகவுமிருக்கலாம்! ஆனால், அவர்எங்கிருந்து வந்திருக்கிறார் என்பது உனக்குத் தெரியுமா?

"அவரைப் பற்றி இத்தனையும் சொன்ன எனக்கு இது கூடவா தெரியாது? இந்தியாவிலிருந்து வந்திருக்கிறார்!"

"இந்தியா! அதன் நிலை தெரியுமா உனக்கு?

"ஏன் பரந்து விரிந்த நாடாயிற்றே அது!"

"பரந்து விரிந்திருந்தென்ன-சிறந்து அறம் செழித்தென்ன-இன்று அது பரங்கியர் களின் கையிலல்லவா அடங்கிக் கிடக்கின்றது.

"ஆமாம்!"

"அத்தகைய அடிமை நாட்டிலிருந்து வந்திருக்கும் ஒருவரின் பேச்சில் நீ எதைக்காணமுடியும்? அவர் கவிஞராயிருக்கலாம் கற்ற மேதையாயிருக்கலாம்! என்றாலும் அவர் ஒரு அடிமை நாட்டைச் சார்ந்தவர்! அவர் பேசும் பேச்சில் எப்படியும் அடிமை வாடை வீசத்தான் செய்யும்! அந்தக் காற்றை நம்மால் சகித்துக் கொள்ள முடியுமா? எனவேதான் எனக்கு அங்கு வர விருப்பமில்லை!" என்றான் அந்த நண்பன்.

இதைக் கேட்டதும் ஆச்சரியத்தில் மூழ்கி நின்றான் மற்றவன்.

* * *

வள்ளுவர் நமக்குச் சொந்தமாயிருப்பினும், வண்டமிழ் நமக்கு மொழியாயிருப்பினும், கலை பல நாம் கற்றவராயினும, கொடிகட்டி வாழ்ந்தோராயினும், கோட்டைக் கொத்தளங்கள் அமைத்தோராயினும், இன்ப இலக்கியங்களைக் கொண்டோராயினும் அடிமை முத்திரைக் குத்தப் பட்டவர்களே இன்று நாம்!

விதலைடு வேட்கை புகைந்து—உணர்ச்சிகள் யாவும் வெடித்து-அடிமைத் தளையறுக்கப்படும் நாளே, நாம் இத்தனை செல்வங்களைப் பெற்றிருந்தும் பலனைப் பெறும் நன்னாளாகும்!

அந்நாளும் எந்நாளோ வென்று இல்லாமல் அண்மையிற்தான் வந்துகொண்டிருக்கிறதென்பதை நாமனைவரும் உணருதல் வேண்டும்!

*

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

வகையான மக்களையும் அவர்தம் அரசியல் உரிமைகளையும், அந்த உரிமைகளைப் பெற அவர்களின் முயற்சிகளையும் எல்லா வகையிலும் எல்லா நிலையிலும் ஆதரித்துள்ளது.

மராட்டிய மக்களின் கிளர்ச்சிகள். நாக நாட்டினரின் விடுதலை வேட்கை நிறைந்த உரிமைப் போராட்டம் இப்படி எதனையும் கழகம் கண்டிக்கவில்லை, காட்டிக் கொடுக்கவும் இல்லை! அகில இந்தியா என்றஅடிமைச்சங்கிலியை உடைக்க வேண்டும் என்றுகூறுவது வடபுலத்து மக்களையெல்லாம் பகைத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினாலே அல்ல! அரசியல் சட்டத்தினாலே தென்னவரை தாழ்த்தும் அநீதிகளை அடக்குமுறைச் செயல்களை மொழியினைக் கொல்லும் மூர்க்கப் போர் முறைகளைத்தான் கண்டித்து வருகிறோம். அந்த வெறியர்களின் இரும்புப் பிடியிலேயிருந்து திராவிட மக்கள் விடுதலை பெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

வடநாட்டிலே யிருக்கும் எந்தக் கட்சிக்காரனும் முன்னேற்றக் கழகம் பகை வளர்ப்பதாகக் குற்றம் சாட்டியதில்லை. பேதம் வேண்டாம், பிரிவினை வேண்டாம். நாம் ஒன்றாகவே இருப்போம் என்றுதான் வேண்டுகிறார்கள்! ஆனால் இந்த அகில இந்தியதேசியத்தின் புதிய தத்துப்பிள்ளைகள். வடவரின் மடியிலே தங்களது முகத்தினை மறைத்துக் கொள்ளும் மாவீரர்கள் முன்னேற்றக்கழகம் வடவருடன் பகை வளர்த்து விட்டதாகஉளறுகிறார்கள்! உண்மைகளை மறைக்கிறார்கள்!

நான் கண்ட அண்ணா

(இப்படி விட்டு விட்டு நான் எழுதுவதற்கு மன்னியுங்கள்...)

நீடாமங்கலத்தில் மிகவும் சிறப்புடன் திராவிட மாணவ மாநாடு நடந்தது. அப்போது நான் திருத்துறைப்பூண்டியில் படித்துக் கொண்டிருந்தேன், மாநாட்டுக்கு முன்னதாக மாணவர்களின் நிர்வாகக்குழு கூடியிருந்தது. அந்த ஆண்டு மாணவர் கழகத் தலைவராகத் தோழர் சனார்த்தனத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நாங்கள் எல்லாம் ஆசைப்பட்டோம். அநேகமாக எல்லா மாணவத் தோழர்களுமே அதை விரும்பினார்கள். ஆனால் தோழர் ஈ. வெ. கி. சம்பத்தை தலைவராக்க வேண்டுமென்று அய்யா விருப்பம் தெரிவித்து விட்டார் என்று தெரிந்தது.

தவமணி இதைச்சொல்லி எல்லோரையும் வற்புறுத்தினார். அய்யா வீட்டில் ஒரு பிள்ளை இந்தளவுக்கு வந்திருக்கிறதே என்று மகிழ்ந்தவர்கள்தான் நாங்களும்! நீடாமங்கலம் மாநாட்டுக்கு முதலாண்டுதான் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆர்வத்தால் திருவாரூரில் கூடிய தென் மண்டல திராவிட மாணவர் மாநாட்டுக்குத் தோழர் சம்பத்தை அழைத்து வந்து தலைமை வகிக்கச் செய்தோம்.

அந்த மாநாட்டுக்கு நான் செயலாளன். கருணாநிதி வரவேற்புத்தலைவர். சம்பதுகழகக்கூட்டங்களுக்குப் போகக் கிளம்பிய ஆண்டும் அதுதான்! ஆனால் சனார்த்தனம், பல்லாண்டுகளாக அப்பணியிலீடுபட்டு வருகிறவர்!! அய்யா சனார்த்தனம் பெயரைத்தான் சொல்லியிருக்க வேண்டும் வீறுகொண்டு அநீதிகள் என்றால் சாடும் அய்யா, மங்கி மங்கி, பாசத்துக்கு முதலிடம் தருபவராக உருவாகி வருகிறார் என்பதை யாரும் அறியாரே அப்போது.

என்ன இருந்தாலும் குடும்பத்துப்பிள்ளை! தன்னைப்போல் அதற்கும் ஒரு மவுசு வேண்டும்!!—

(4 -ம் பக்கம் பார்க்க)

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு ரூ 85.

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,
(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

4-ம் பக்கத்தொடர்ச்சி

வைத்துவிட்டுவாருங்கள்'' என்று பேசி முடித்தார்!!

மேடைகளில் தடியைத் ... வது மட்டுமல்ல, உள்ளத்தில் ஊடுருவிய 'தாழ்வு மனப்பான்மை'யை விளக்க ஒரு நல்ல சம்பவம் கவனத்துக்குவருகிறது. சீர்காழியில் திராவிட கழகப் பொதுக்கூட்டம் ஒன்று நடந்தது அதில் அய்யாவுக்கு முன்னதாகத் தோழா இரா. நெடுஞ்செழியன் பேசுகிறுர். இப்போதல்லவா தன்னுடைய தமிழ்நடையை நகைச்சுவை நடையாக நண்பர் நெடுஞ்செழியன் மாற்றிக்கொண்டிருக்கிருர். அப்போது எழுந்து நின்று கம்பீரத்தாடியை உருவி விட்டுக்கொண்டு, அன்புகெழுமிய தலைவர் அவர்களே! என்று துவங்கினுல், மடை திறந்தாற்போல, செந்தமிழ் சதிராடும் பிற பேச்சாளர்களைப்போல, ஏதோ பேசினேம் என்று போகிறவரல்ல நெடுஞ்செழியன்.

நெடுஞ்செழியன் பேச்சுக்கு கருத்துமுக்கியம்என்பதால்ஏராளமான ஆதாரங்களையும்புள்ளி விபரங்களையும் அள்ளி அள்ளித் தருவார். அதே போல, அந்தச் சீர்காழிக் கூட்டத்திலும் சுமார் ஒன்றரை மணி நேரம் (இதுவே அய்யாவால் பொறுக்க முடியாது!!) திராவிடநாடு என்ருல் என்ன, அதன் எல்லை எது, பரப்பளவு என்ன, ஏன் கேட்கிருேம், என்பதற்கான விபரங்களையெல்லாம், மக்கள் கைதட்ட கைதட்ட அடி அடியென்று அடித்துப்பேசிவிட்டு உட்கார்ந்தார். அய்யாவின் பாராட்டுதல் தனக்குக் கிடைக்கும் என்றும் அவர் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனுல் அடுத்து அய்யா பேச எழுந்ததுமே ஆரம்பித்தார்கள்... "இந்நேரம் என்னென்னமோ அது இது என்றெல்லாம் காரணங்களைக்காட்டி அதற்குத்தான் திராவிடநாடு கேட்கிருேம் என்று நெடுஞ்செழியன் பேசினுர். அவர் சொன்ன அதுக்காக எல்லாம் இல்லீங்க, நான் திராவிடநாடு கேட்பது! நான் திராவிடநாடு கேட்கிறதுக்குக்காரணம் சூத்திரப்பட்டம் போகணும். அவ்வளவுதான்...'' என்ருர். நெடுஞ்செழியனுக்கு எப்படியிருந்திருக்கும் என்பதைவிடக் கூட்டத்துக்குப் போயிருந்த எங்களுக்கெல்லாம் எப்படியிருந்திருக்கும். ஏ அய்யா நெடுஞ்செழியனை 'மட்டந் தட்டுவது' போல மேடையில் பேச வேண்டும்? அந்த மனநிலை ஏன் ஏற்பட்டது? ஒருவகையில் பார்த்தால் நெடுஞ்செழியனே அன்பழகனே கருணநிதியோ அய்யா விரல் காட்டிய திசையில் நடக்க வந்ததால் பெருமை பெற்றவர்கள்தான்! அந்தப் பெருமைக்குமுன் ஒரு சாதாரணப் பொதுக்கூட்டத்தில் நன்ருகப் பேசி ஓரிரு கைதட்டு தலைப் பெற்றுவிடுவது எந்த மூலை? எனினும் அய்யாவால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை! அதற்கு மூல காரணம், தன்னுடைய வளர்ச்சியின் அளவை அய்யா, அறியமறந்தார் — சாதாரண ஆசாபாசங்களையே பெரிதாக எண்ணலானுர்!!...

இன்னும்கூட ஒரு நிகழ்ச்சி கவனத்துக்கு வருகிறது. எங்கள் திருவாரூருக்குப் பக்கத்தில்மாவூர் என்ருெரு ஊருண்டு, என்னுடைய கிராமத்துக்குப் பக்கத்துக கிராமம். அங்கே சர். ஆர். எஸ். சர்மா என்ருெருவர் இருந்தார். பெரிய காளிகோயில் கட்டினுர். அதன் பெயரால் திருவாங்கூர் சமஸ்தானம், பரோடா சமஸ்தானம், மைசூர் சமஸ்தானம் போன்ற இடங்களிலெல்லாம் இலட்சக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்து, தமிழகமே மலைக்கிற அளவுக்கு இசை நிகழ்ச்சிகளும்கேளிக்கைகளும்நடத்தினுர் பிரிட்டிஷ் அரசின்காலத்தில் அவருக்கு பெருமையும் அந்தஸ்துமிருந்தது. சர்ச்சிலைச் சந்திப்பதும் அமெரிக்காவுக்குப் போய் வருவதும் அவருக்குச் சாதாரணம். வெள்ளையரசாங்கத்தில் அவருக்கு என்ன உத்தியோகம் என்று கேட்டால் சொல்ல முடியாது! ஆனுல் வெள்ளையர்களின் தயவை நம்பி வாழ்ந்த பல சுதேச சமஸ்தானங்களுக்கு அவர் ஆலோசகர்!!

ஒவ்வொரு சமஸ்தானமும் அவருக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று பணம்அனுப்பிவிடும். அப்படிப்பட்ட செல்வாக்கால் சிறப்பு பெற்று வாழ்ந்த அந்த சர்மா, அந்தக் காலமும் இந்தக் காலமும் அய்யா திட்டிவரும் பார்ப்பன வகுப்பைச் சார்ந்தவராவர்! அவருடைய பங்களாவும், நீராழி மண்டபமும், உத்தியானவனமும் பார்க்கப் பிரமிப்பாயிருக்கும். அந்த சர்மாவின் பங்களாகிடைத்தது—மாணவர் பிரச்சாரப்பயிற்சி நடத்த. அந்த விஷயம் மிகமிகப் பூரிப்பான ஒன்று என்று அய்யா கருதினுர்! பார்ப்பனரை வெறுத்துப் பேசுகிருேமே—அங்கு போகலாமாஎன்றுகூட எண்ணவில்லை!

அவ்வளவு பெரிய மனுஷன்—எவ்வளவு பெரிய பங்களாவை—அதுவும் நமக்காக ... இப்படி எண்ணி அங்கு போய் இருந்தார். அந்த விபரங்கள் பூராவும் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அவர் போனதுகூட அல்ல, கிடைக்கக்கூடாத ஒன்று கிடைத்ததாகவும் எண்ணினுர்! இதன் அடிப்படை என்ன — தாழ்வு மனப்பான்மை தன்னைவிடப் பணத்தில் சிறந்தவன் அவன் என்கிற ஒரு எண்ணம், அதனுல் தனக்குள்ளேயே ஒரு மலைப்பு, அதன் காரணமாக 'அவனே அழைக்கிருன்' என்று ஒரு பூரிப்பு...சரி இந்தக் கதை, நீளும், எதிர்காலச் சரித ஆசிரியர்களுக்கு விட்டு விடுகிறேன்......

விடுதலை அலுவலகத்திலிருந்த என்னிடமும்கணேசுவிடமும்அண்ணன் குருசாமியவர்கள் தன்னுடைய இருக்கையிலிருந்து அவசர அவசரமாக ஓடிவந்தார்கள். ஏதாவது முக்கியமான உணர்ச்சிப் பொங்கக்கூடிய விஷயமாகயிருந்தால், எங்களிடம் ஆவலோடு சொல்ல ஓடி வருவார்கள். ஆனுல் அன்று அவர்கள் சொன்ன சேதியோ எங்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அந்தச் சேதி, அன்பழகன் — கருணநிதி இருவரையும் பற்றியதாகும்.

(வளரும்)

வான்மதி

ஆசிரியர்:
ஆரூர்-ஆனந்தன் பி.எஸ். சி.பி.டி, ஓ.எம்.ஐ.டி.

செப்டம்பர் இதழில் சாண்டில்யன், ஜகசிற்பியன், அகிலன், கோமதி சுவாமிநாதன், கண்ணதாசன், கோவி-மணிசேகரன் ஆகியோர் எழுதுவர்

ஏராளமான பக்கங்கள் படங்கள்! இருபதே காசு! இணையற்ற விருந்து.

அக்டோபருக்குள் ஆண்டுச் சந்தா ரூ 3 அனுப்பினுல் 1962-ம் ஆண்டு காலண்டரும், பொங்கல் மலரும் அன்பளிப்பாக அனுப்புகிருேம்.

வான்மதி சென்னை-33

(2—ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் சமயத்தில்தான் அவர்கள் மாநாடு போட வேண்டும்.

அப்போது போட்டால், 'அறுவடை'யைப் பார்க்க முடியாதே! அதனுல் இப்போது முதலே ஆயத்தம் செய்கிருர்கள்!!

அவர்கள் கட்சிக்குள்ளேயே சிலர் இப்போது ஏன் மாநாடு, என்றனராம்.

"எல்லாம் காரியமாகத்தான்!" என்று பதில் தரப்பட்டதாம்.

கொள்கை பிடிக்கவில்லைஎன்று போதல், தவறல்ல. அக்கொள்கையை வளர்க்கப் பாடுபடுவதும் ஜனநாயக மண்ணில் குற்றமல்ல.

அதற்காகக் குட்டிக் கர்ணங்கள் போடுதலும், குப்யோ முறையோ என்றலறி குத்தீட்டி கொண்டு பிறரைக் குத்திக் கொண்டேயிருக்க வேண்டும்என நினைப்பதும் கேவலம்.

நான் வாழ வேண்டும்!—என்று எண்ணுவது, பிழையல்ல. அவன் செத்தால்தான் நான்வாழ்வேன்!!—என்று அனுதினமும் பாராயணம் செய்வது, மகாக் கேவலம்.

கேவலமாவது! மகாக் கேவலமாவது!! கிடைத்த வரையில் இலாபம்—உங்களை ஒழித்த வரையில மகிழ்ச்சி என்று கூடிப் பேசிக் குதூகலிக்கவே தமிழின மரியாதையைத் தரையில் வெட்டி மூடினுர்கள் முதலில்.

ஏடா! போடா! என்னடா! அண்ணுத்துரையாடா!— என்று அரசியல் முழக்கம் எழுப்பினுர்கள்.

அதுவே இலட்சியம்!—என்றும் இப்போது காரியங்களைச் செய்கிருர்கள்.

"எவனெருவன் இருதயத்தில் அருவெறுப்பு எனும் தீயை ஏற்றி வைத்துக் கொள்கிருேனே அதே தீ அவனுக்குள்ளேயேவளர்ந்து கடைசியில் அவனையே எரித்துவிடும்'' என்பது பெரியோர் வாக்கு.

எந்தப் பெரியவன் சொன்னுன்? யார் அவன் என்னைவிடப் பெரியவன்? என்று புதிய கட்சியிலிருக்கும் தொண்டர்கள்கேட்க மாட்டார்கள். தலைவர் கேட்கக்கூடும். அதற்கு நாம் என்ன? யாருமே பதில் சொல்ல முடியாது—காலத்தைத் தவிர!

கேள்வி பதில்

கேள்: 19—8—61ல் எங்களூரில் பேசிய கண்ணதாசன் ரூபாய் ஐநூருே, ஐய்யாயிரமோ கொடுத்தால் வாங்கிக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட்டு வருவதற்குத் துடிக்கும் பல பேரை எனக்கு தெரியும் என்ருர்! அப்படியானுல் அவர் வெளியேறிய போதும் யாரிடமாவது இப்படி 'எக்ரிமெண்ட்' செய்துகொண்டுதான் வெளியேறினுரா?

என். எஸ். கமாலுதீன்.
நெடுஞ்சாலே, மதுக்கூார்

ப: கவிஞர் கண்ணதாசன்எதையும பேசுவார்! அவருடைய மனம் ஒரு நிலேயிலிருக்காது. அதைப் போலத்தான் அவருடைய கொள்கையும். 1961 கண்ணதாசன்—1956 கண்ணதாசன்—1958 கண்ணதாசன் என்று பிரித்துப் பார்த்தால் அவருடைய சொல்லும் செயலும் சொக்கட்டான் காய்கள் போல என்று அறியலாம்.

கே: (1)குறிப்பிட்ட சாதி மத உணர்ச்சி தவருனது என்று கூறும் தி. மு. கழகம் குறிப்பிட்ட இன, தேசீய உணர்ச்சியின் அடிப்படையில் திராவிட நாட்டை ஏற்படுத்த முயற்சிப்பானேன்?

(2) மிகவும் பிற்போக்கான கொள்கைகளேக் கொண்ட சுதந்திராக்கட்சியுடன் தி.மு.க. கூட்டு சேர்வது காங்கிரசை அழிக்கப்போய் அதே குட்டையில் ஊறிய மற்ருென்றை ஆக்கப்படுத்துவதாகாதா?

சா. கோவிந்தசாமி,
மெயின் ரோடு,
ஆவூர்.

ப: (1) உலகெலாம் உரிமை! அது மனித இனம்!!— என்ருெரு அன்பு நெறி மலர வேண்டுமென்பது, அண்ணுவின் வழியாகும். அப்படிப்பட்டவர் தலேமையில் இயங்கும் தி. மு. க. குறிப்பிட்ட சாதி—மத உணர்ச்சிகளேச் சொல்லி நாடு கேட்கவில்லே. ஒவ்வொருவர் வயிறும் நன்ருக நிரம்பிடும் போதுதான் மனித நெறியைப் பற்றி நினேக்கவாவது முடியும். அப்படிப்பட்ட காரியங்களேப் புரிய ஒரு எல்லேயும் அதற்குள் மக்களும் அவர்களுக்கொரு அரசும் இருந்துவருகிறது, அந்தந்த அரசும் தனது நாட்டுக்கான—மக்களுக்கான தேவைகளேப் பூர்த்தி செய்யுமானுல், அடுத்த நாட்டுடன் மனித நெறியுடன் வாழும் மனேபாவம் ஏற்படும். அடுத்த நாடும் அதே போலக் கவனித்தால் உலக ஒற்றுமை நீடிக்கும்.

எல்லே அதிகமாக, ஒரு அரசு சரியாகவும் கோடிக்கணக்கான மக்களுடைதேவைகளேப் புரிந்துகொள்ளவும் இயலாது. அதனுலேயே தனிநாடு கேட்கிருேம். அப்படிக்கேட்கும் போது 'எதுவரைக்கும் கேட்கிருய்?' எனக்கூடுமல்லவா? அதைச் சொல்ல நமகது மட்டுமல்ல உலகிலுள்ளோருக்கே உள்ள வழிகள்—பழைமையான வரலாற்றுதொடர்பாகும் கலே—நாகரீகம் மொழி என்பவையே அந்த வரலாற்றை நிர்ணயிக்கக் கூடியதாகும். அதனுலேயே நாமும் அந்த அடிப்படைகளே வைத்து தனி அரசு கோருகிருேம்!

(2) இந்தக் கேள்விக்கு முன்பே விடை தந்துள்ளேன். தயவு செய்து அதைப் புரட்டிப் பார்க்க வேண்டுகிறேன்.

* * *

கே: பெரியாரை முதன் முதலாகச் சந்தித்தபோது 50 வயதுக்கும் குறைந்த தன்னிடம் அவர் அவ்வளவு மரியாதையாக நடந்துகொண்டதாக தன் பத்திரிகையில் எழுதியிருந்தார் கண்ணதாசன். அதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

கோ. சி. வேலன்,
பனேமரப்பெட்டி

ப: 83 வயதுள்ள அய்யாவை விட 50 வயதுக்கும் குறைந்தவர் என்ரு தன்னேப் பற்றிச் சொல்லியிருக்கிருர்? தவறு, தவறு. 80 வயது குறைந்தவராச்சே, அரசியல் வாழ்வில் கவிஞர்!!

* * *

கே: 'பெறுமானம்' உள்ள பெரிய குடும்பத்துப்பிள்ளே சம்பத், தி. மு. கழகத்திலிருந்து கொண்டுபோன நிதியைக் திருப்பி கொடுத்து விட்டாரா? கொடுப்பாரா? அதே போலத் தானே இப்போது நடக்கும் தன் கட்சி மாநாட்டில் ஏதாவது மிச்சப்பட்டால் அதையும் செய்வார்?

மோ. அண். மலேயரங்கம்.
வரதை,
வட்டம் 91.
சென்னே

ப: திருப்பிக் கொடுக்கவில்லே, 'பெறுமானம்' உள்ளவர்களிடம் போன பணம் திரும்புமென்று உறுதி சொல்ல என்னுல் முடியாது. இப்போது அவர் வைத்திருக்கும் கட்சி அவருடைய சொந்தக் கட்சி அதற்கு சகலமும் அவரே—பொருளாளர் உள்பட. அதனுல் எதுவந்தாலும் அவருக்குத்தான். அதோடு விரைவில் பொதுத் தேர்தல் வரப் போவதால் பார்லிமெண்டுக்கு நிற்க அவருக்கும் பணம் வேண்டுமல்லவா?

* * *

உயரிய முயற்சி! நீங்கள் மகிழ!!

கழகத்தின் சாதனே! உலக விடுதலே நாடுகள்!

நாம் செய்ய வேண்டியவை!

விளக்கும்

'அறப்போரின்' **ஒரு ஒப்பற்ற மலர்**

அறிஞர் அண்ணு, மற்றும்கழகத் தலேவர்கள் கட்டுரைகள்!

ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டிய மலர்

48 பக்கம், 15-9-61 அன்று வெளிவரும் விலே 50 காசு

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12-3. வது குறுக்குத்தெரு சென்னே 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லே அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னே-6